நாள் - 01.04.2026

**C.C. No**.55/2020

**அ.சா.1- திரு.M.சந்திரசேகரன் (மருத்துவர்)**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 01st **day of April** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**1 முதல் 4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் அன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் தான் அன்றைய தினம் நான் ஆய்வுக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் ஆய்வுக்கு சென்றபொழுது என்னுடன் இரண்டு மருத்துவர்கள் வந்தார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்கள் எனக்கு வாய் மூலமாக உத்தரவு பிறப்பித்தார். நான் அளித்த புகாரில் போன் மூலமாக தகவல் கிடைக்கப்பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் வாய் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் தெரிவித்தார். அன்றைய தினம் முகவை மருத்துவமனைக்கு மட்டும் சென்றோமா அல்லது வேறு மருத்துவமனைக்கு ஏதேனும் என்றோமோ என்றால், முகவை மருத்துவமனைக்கு மட்டும்தான் சென்றோம்.

2. மருத்துவர் இல்லாமல் செயல்படுவதாக தெரிவித்து மேற்படி மருத்துவமனை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் படி எனக்கு சொல்லியிருந்தார் அதன்படி நான் ஆய்வுக்கு சென்றேன். மாவட்ட ஆட்சியர் அவர்கள் எதிரிகள் மீது ஏதேனும் பொதுமக்கள் புகார் அளித்து மேற்படி புகார் என்னிடம் காண்பித்தாரா என்றால் அவ்வாறு எதுவும் என்னிடம் காண்பிக்கவில்லை. நான் மேற்படி முகவை மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்திருப்பேன் என்றால் சுமார் 1.30 மணி நேரம் முதல் 2 மணி நேரம் இருந்திருப்பேன்.

3. நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் மூன்று எதிரிகளும் அப்போது மருத்துவமனையில் தான் இருந்தார்கள். அவரை தவிர்த்து வேறு ஒருவரும் இருந்தார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. நான் மருத்துவமனை சென்று ஆய்வு மேற்கொண்ட பொழுது எத்தனை மருத்துவர்கள் இருந்தார்கள் என்றால் வெளி நோயாளி பிரிவில் ஒரு மருத்துவர் இருந்தார். உள் நோயாளிகள் பிரிவில் எந்த மருத்துவரும்

இல்லை.மேற்படி ஒரு மருத்துவர் தவிர்த்து வேறு யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஆய்வுக்கு சென்ற பொழுது A1 to A3 அல்லது வேறு ஒரு நபர் யாரேனும் மருத்துவர் உடை அணிந்து தங்களை மருத்துவர்கள் என தெரிவித்தார்களா என்றால் அவ்வாறு யாரும் தெரிவிக்கவில்லை.நான் மருத்துவமனைக்கு ஆய்வு சென்ற பொழுது வெளியே இருந்த போர்டை பார்த்தேன், அதில் மருத்துவர் பெயர் போடப்பட்டிருந்தது, வெளி நோயாளி மருத்துவர் என குறிப்பிடப்பட்டிருந்தது மருத்துவரின் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

4. எதிரிகள் பெயர் மருத்துவர்கள் பெயர் போடில் இல்லை. நான் மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்ட பொழுது எதிரிகள் யாரையேனும் விசாரித்தேனா என்றால் 2 முதல் 4 எதிரிகளை விசாரித்தேன் 1 வது எதிரி காலதாமதமாக வந்தார், அவரை விசாரிக்கவில்லை. எனது விசாரணையில் எதிரிகள் நான்கு பேரும் மருத்துவமனையில் பணி செய்வதற்கான படிப்பு இருந்தார்கள் என்றால் சரிதான்.மேற்படி எதிரிகள் நான்கு பேரும் மருத்துவமனையில் பணி செய்வதற்கு அருகதை உடையவர்கள் என்றால் சரிதான். நான் அங்கு பணியில் இருந்ததாக சொல்லப்படும் மருத்துவமனை மருத்துவரை எவ்வளவு நேரம் விசாரித்தேன் என்றால் ஐந்து நிமிடம் விசாரித்தேன் அவர் எனது விசாரணையின் பொழுது தான் வெளி நோயாளிகளை மட்டும் பார்த்துக் கொள்வதாகவும் உள்நோயாளிகள் பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனவும் கூறினார்.

5. மேற்படி வெளி நோயாளிகள் மருத்துவர் medical council of india பதிவு பெற்ற மருத்துவர். நான் மேற்படி வெளி நோயாளிகள் மருத்துவராக எத்தனை வருடங்கள் பணி செய்து வந்தார் என விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அது சம்பந்தமாக விசாரணை செய்யவில்லை. நான் மருத்துவரிடம் மேற்படி அவரின் பெயர் போர்டில் இருந்ததா என கேட்டேனா என்றால் கேட்டேன் அவருடைய பெயரும் பெயர் போர்டில் இருந்தது. மேற்படி வெளி நோயாளிகள் மருத்துவர் தவிர்த்து நான்கு மருத்துவர்கள் பெயர் போர்டில் இருந்தது. மேற்படி நான்கு பெயர்கள் இருந்ததாக சொல்லப்படும் மருத்துவமனைக்கு வருவதில்லை என அங்கு சிகிச்சையில் இருந்தகவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேன்.

6. நான் மேற்படி பெயர் பலகையில் இருந்ததாக சொல்லப்படும் மருத்துவர்கள் யாரையேனும் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. நான் விசாரிக்காததற்கு காரணம் அவர்கள் மருத்துவமனைக்கு வந்து செல்வதால் தான் என்றால் சரியல்ல. பொதுமக்கள் யாரையேனும் விசாரித்தேனா என்றால் பொதுமக்கள் யாரையும் விசாரிக்கவில்லை.

ஆனால் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த நோயாளி விசாரித்தேன். நான் விசாரித்த நோயாளியின் பெயர் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை.

7. போலீசார் என்னை விசாரித்த பொழுதும் மேற்படி நான் விசாரித்ததாக சொல்லப்படும் நோயாளியின் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி உள் நோயாளி பிரிவில் இருந்த நோயாளிகளின் case sheet பார்வையிட்டேன். மேற்படி case sheet நான் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.மேற்படி case sheet நான் எடுக்காததற்கு காரணம் மேற்படி case sheet எனக்கு தேவையில்லை என்பதால் தான் என்றால் சரிதான். அதில் எதுவும் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தது. நான் வெளி நோயாளிகள் பிரிவில் இருந்ததாக சொல்லப்படும் மருத்துவர் உடன் வேறு மருத்துவர்களும் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் விசாரித்ததாக சொல்லப்படும் ஒரு நோயாளியை தவிர்த்து வேறு நோயாளிகளும் அங்கு சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் சரியல்ல எனது ஆய்வின் பொழுது ஒரு நோயாளி மட்டும் உள்நோயாளி சிகிச்சை பிரிவில் இருந்தார்.

8. எனது ஆய்வின் போது மேற்படி மருத்துவமனையில் எத்தனை உள்நோயாளிகள் அறை இருந்தது என கணக்கிடவில்லை. நான் ஆய்வு மேற்கொண்டபொழுது மேற்படி மருத்துவமனையில் special ward இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி மருத்துவமனையில் நாங்கள் ஆய்வு மேற்கொண்ட பொழுது மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் இருந்ததா என்றால் இருந்தது. ஆனால் முழுமையாக இல்லை. முழுமையாக இல்லை என்பது அவசர நேரத்தில் பயன்படுத்தப்படும் ஜெனரேட்டர் இல்லை. பொதுவாக யார் வேண்டுமென்றாலும் மருத்துவமனை நடத்தலாம், ஆனால் மருத்துவர் இருந்துதான் நடத்தப்பட வேண்டும். நான் மருத்துவமனை சென்ற பொழுது அங்கு மருத்துவர் இருந்தார் என்றும் மருத்துவர் ஆலோசனையின் படி தான் மேற்படி மருத்துவமனை இயங்கியது என்றால் சரியல்ல .

9. **பொதுவாக ஒரு மருத்துவமனையில் ஒரு உள் நோயாளியாக உள்நோயாளியை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் அனுமதிச்சீட்டு மருத்துவர் கையொப்பத்துடன் பூர்த்தி செய்து இருக்கப்பட வேண்டும். மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட அனுமதிச்சீட்டு எங்கள் ஆய்வின்பொழுது இல்லை. மேலும் மேற்படி நாங்கள் ஆய்வு மேற்கொண்ட கோப்புகளில் ஒவ்வொரு நாளும் மருத்துவர்கள் நோயாளிகளை பார்வையிட்டு குறிப்பு எழுதி அறிவுரைகள் அளித்து மருத்துவர் கையொப்பம் செய்திருக்க வேண்டும் அவ்வாறு எந்த முறைகளும் பின்பற்றப்படாமல் இருந்தது.** நான் மேற்சொன்ன

அனைத்து முறைகளும் பின்பற்றப்பட்டு இருந்தது என்றும், ஆனால் 1000 க்கும் மேல் ஆவணங்கள் இருந்ததால் பெரிய சுமையாகவும் இருக்கும் என எண்ணி நான் அதனை கைப்பற்றாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரித்த பொழுது நான் மேற்படி CASE SHEET கைப்பற்றுமாறு ஏதேனும் கூறினேன் என்றால், அவ்வாறு எதுவும் கூறவில்லை.

10. மேற்படி மருத்துவமனையில் தமிழக அரசால் வழங்கப்படும் MEDI CLAIM மற்றும் தனியார் இன்சூரன்ஸ் மூலமாக நோயாளிகள் பயன் பெற்றுள்ளார்கள் அது சம்பந்தமாக மேற்படி மருத்துவமனையின் காசாளரை நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. காரணம் காசாளர் மருத்துவமனையில் யாரும் இல்லை. மேற்படி ஆவணங்கள் அனைத்தையும் நான் பார்வையிட்டேன் வழக்கிற்காக பார்க்கவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆய்வு செய்த பொழுது ஒவ்வொரு அறைக்கும் சென்று பார்வையிட்டேன். எதிரிகள் யாரும் எங்களை பார்த்து ஓடவில்லை எங்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது விசாரணையின் பொழுது நான் விசாரித்ததாக சொல்லப்படும் மருத்துவர் எதிரிகள் மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் சொன்னாரா என்றால், எனக்கும் மேற்படி உள் நோயாளிகள் பிரிவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தெரிவித்தார். CASE SHEET மருத்துவமனையில் இருந்த அனைத்து பார்வையிட்டேன் என்றும் அதில் பெயர் பலகையில் இருந்த மருத்துவர்கள் முறையாக கையொப்பம் செய்திருந்தார்கள் என்றும், அதன் அனைத்தும் நான் பார்வையிட்டு வேண்டுமென்றே இவ்வழக்கில் நான் கைப்பறவில்லை என்றால் சரியல்ல .

11. மேற்படி எதிரிகள் பணிபுரிந்த மருத்துவமனை அருகே தனியார் மருத்துவமனை பாலாஜி என்ற பெயரில் இயங்கி வந்தது என்றால், அது சம்பந்தமாக எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி பாலாஜி மருத்துவமனைக்கும் எதிரிகள் பணிபுரிந்த மருத்துவமனைக்கும் தொழில் சம்பந்தமாக போட்டியின் காரணமாக பாலாஜி மருத்துவமனை நிர்வாகம் மூலமாக பொய்யான புகார் கொடுத்து அதன் அடிப்படையில் நான் அதற்கு ஆதரவாக விசாரணை மேற்கொண்டு புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் 2 மணி நேரம் விசாரணை செய்ததாக சொல்லப்படும் விவரம் 2 பக்கம் குறிப்புகளாக எடுத்தேன். மேற்படி குறிப்புகளை போலீசார் விசாரணையின் போது அளிக்கவில்லை என்றால் சரிதான். குறிப்புகளை நான் அளிக்காததற்கு காரணம் மேற்படி குறிப்புகள் அளிக்க வேண்டியது இல்லை என்பதால் அதனை அனைத்தும் குறிப்பிட்டு புகாராக அளித்தேன். மேற்படி மருத்துவமனை இயங்கி

வந்ததாக சொல்லப்படும் கட்டிடம் உரிமையாளர் யார் மேற்படி உரிமையாளர்கள் எதிரிகளில் ஒருவரா என விசாரித்தேனா என்றால் அது சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

12. மேற்படி மருத்துவமனைக்கு GST பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக அவசியம் இல்லை என்பதால் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. நான் ஆய்வு மேற்கொண்ட பொழுது எதிரிகளின் CERTIFICATE நான் கேட்கவில்லை. மருத்துவரை விசாரித்து அவரின் சான்றிதழ் வாங்கினேன் என்றால் அவரின் எண் வைத்து அவர் பதிவு செய்யப்பட்ட மருத்துவர் என விவரம் தெரிந்து கொண்டேன். நான் மருத்துவமனையில் ஆய்வுக்கு சென்ற பொழுது மோகன பாஸ்கர் மற்றும் மார்ஷல் முகேஷ் ஆண்டனி என்ற இரு மருத்துவர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி மோகன பாஸ்கர் மருத்துவர் அவர்களுக்கு 40 வருட அனுபவம் வாய்ந்தவர் என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது.மேற்படி மருத்துவமனையானது மேற்படி பெயருக்கு பலகையில் இருந்த மருத்துவர்களால் தான் நடைபெற்றது அதன் கீழ் தான் எதிரிகள் பணி செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் உண்மையாக குற்றம் புரிந்திருந்தால் மேற்படி மருத்துவமனையில் இருந்த மருத்துவர்கள் புகார் அளித்திருப்பார்கள் என்றும் எதிரிகள் எந்த குற்றத்திலும் ஈடுபடாததால் தான் எந்த புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

13. நான் மேற்படி மருத்துவமனைக்கு ஆய்வு சென்றபோது என்னுடன் என்னையும் சேர்த்து மூன்று மருத்துவர்கள் இருந்தோம் நான் என்ன விவரங்கள் செய்தேன் என்ற விவரம் என்னை தவிர்த்த இரண்டு மருத்துவர்களுக்கு தெரியும். என்னுடன் வந்த இரண்டு மருத்துவர்கள் ஏதேனும் குறிப்பு எடுத்தார்களா என்றால் அவர்களும் குறிப்பு எடுத்தார்கள். மேற்படி இரண்டு மருத்துவர்களும் போலீசாரிடம் அவர்கள் எடுத்த குறிப்பை கொடுத்தார்களா என்றால் குறிப்பை கொடுக்கவில்லை. எதிரிகள் எந்த தவறும் இழைக்கவில்லை என்றும் அழுத்தத்தின் காரணமாக நான் இவ்வாறு ஒரு புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>**

பொதுவாக தனியார் மருத்துவமனை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றால் என்னென்ன பதிவுகள் கட்டாயம் பெறப்பட வேண்டும் என்றால்,

1. Clinical Establishment Act ன் கீழ் Certificate பெறப்பட வேண்டும். மேலும் மருத்துவமனையில் பணி செய்யும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருந்து ஆளுநர்கள் அவர்களுடைய பதிவு சான்றிதழும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. நான் அவ்வாறு மருத்துவமனையில் ஆய்வு செய்தபோது Clinical Establishment Actன் கீழ் வழங்கப்படும் Certificate இல்லை. மேலும் Building stability Certificate, Fire safety certificate, சிறப்பு அறுவை சிகிச்சை மேற்கொள்ள அரசு அனுமதி சான்று ஆகியவை இல்லை.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

04.08.2017 ம் தேதி Clinical Establishment Certificate பெற்று மருத்துவமனை நடத்த வேண்டியதில்லை. மாறாக மருத்துவமனை ஆரம்பித்து பின்னரும் பெற்று கொள்ளலாம். Clinical Establishment Certificate சம்பந்தமாக மருத்துவரை விசாரித்து தெரிந்து கொண்டேன். அவ்வாறு தெரிந்து கொண்டதாக சொல்லப்படும் விபரத்தை நான் அளித்த புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும் போலீசார் என்னை விசாரித்த பொழுதும் குறிப்பாக சொல்லவில்லை. நீதிமன்ற கேள்வியின் பொழுது நான் குறிப்பிட்டுள்ள எந்த விபரமும் போலீசார் விசாரணையின் பொழுதும் நான் அளித்த புகாரிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லாததற்கு காரணம் அனைத்தும் சரியாக இருந்ததால் தான் என்றால் சரியல்ல.

**Signature of Witness**

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.04.02 18:18:47 +0530